## கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர்

### COS.No. 18 of 2024

**2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 22ம் நாள் செவ்வாய்க்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | DW2- சுப்ரமணியம் | **கிராமம்:** | |
| **த.பெ.** | ரங்கநாதன் | **வேலை:** | |
| **வயது** | 87 | **செல்போன் எண்** | |

**முதல் விசாரணை:**

**என் பெயர் சுப்ரமணியம், என் தகப்பனார் பெயர் ரங்கநாதன். எனக்கு தற்போது 87 வயது ஆகிறது. நான் 1959 ஆம் ஆண்டு மும்பையில் Diploma in Mechanical Engineering படித்தேன். பின்னர் மேல்படிப்பாக லண்டனில் உள்ள London Institute of City and Guilds என்ற கல்வி நிறுவனத்தில் Advanced Foundry Practice என்ற கல்வித்தகுதி பெற்றேன். பின்னர் பெங்களூரில் உள்ள St.Josephs College ல் Business Administration in Production Management படித்தேன். பின்னர் எனது பணிகளை தொடங்கி கடந்த 2010 ஆம் ஆண்டு வரை நான் தனியார் நிறுவனங்களில் நிரந்தர பணியில் இருந்தேன். பின்னர் 2010 முதல் நான் பல நிறுவனங்களுக்கு consultant ஆக இருந்து வருகிறேன். நான் Project consultancy, Technical consultancy ஆகிய இரண்டு சேவைகளையும் வழங்குகிறேன். 2021 ஆம் ஆண்டு நான் ஒரு நிறுவன பணியை கவனித்துக் கொண்டிருந்தபோது**

பிரதிவாதி நிறுவனமான Horizon Metal Tech நிறுவனம் என்னை ஒரு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும், அதில் நீங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று என்னை அழைத்தார்கள். Horizon Metal Tech நிறுவனம் sick company ஆக இருந்தபோது என்னை புதிதாக Horizon Metal Tech நிறுவனத்தை வாங்கிய நிர்வாகிகள் சார்பாக என்னை அழைத்திருந்தார்கள். அப்போது புதிதாக ஒரு foundry setup செய்ய வேண்டும் என்று என்னிடம் கூறினார்கள். அப்போது என்னிடம் பேச்சுவார்த்தை நடந்த சமயத்தில் எந்த நிறுவனம் இதற்கான எந்திரங்களை சரியாக வழங்குவார்கள் என்று என்னிடம் கேட்டார்கள், அப்போது நான் VME foundry (வாதி) நிறுவனத்தைப் பற்றி பல ஆண்டுகளாக தெரிந்திருந்ததால் VME foundry நிறுவனத்தை பரிந்துரை செய்து நான் Horizon Metal Tech நிறுவன நிர்வாகிகளிடம் தெரிவித்தேன். VME foundry நிறுவனத்தால் பணிகளுக்கான proposal கொடுக்கப்பட்டது. Proposal–ஐ என்னை சரிபார்த்து தரச்சொல்லி Horizon Metal Tech நிறுவன நிர்வாகிகள் கேட்டுக் கொண்டார்கள். அந்த proposal–ஐ பார்த்து அதிலிருந்த திருத்தங்களை மட்டும் சரி செய்து பெற்றுக் கொள்ள கேட்டுக்கொண்டு நான் அவர்களுக்கு வழங்கிய ஆலோசனையில் இருந்து பிப்ரவரி 2021 ஆம் ஆண்டு நான் விலகிக் கொண்டேன்.

அதன் பின்னர் Horizon Metal Tech நிறுவன நிர்வாகிகள் என்னிடம் அவ்வப்போது பேசுவார்கள். மீண்டும் என்னை பிப்ரவரி 2022 ஆம் ஆண்டில் Horizon Metal Tech நிறுவன நிர்வாகிகள் என்னை அவர்கள் நிறுவனத்துடன் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டார்கள். நான் அப்போது வேறு நிறுவனத்தில் பணியாற்றி வந்ததால் என்னால் அப்போது நேரடியாக சென்று பணியாற்ற முடியவில்லை என்று தெரிவித்து விட்டு

பின்னர் ஜூலை 2022 இல் Horizon Metal Tech நிறுவன consultant ஆக பணியாற்றினேன்.

Horizon Metal Tech நிறுவன பணியில் சேர்ந்த பிறகு VME foundry நிறுவனம் supply செய்திருந்த பொருட்களை ஆய்வு மேற்கொண்டு VME foundry நிர்வாகிகளை நான் அவர்கள் supply பொருட்களை audit செய்வதற்கு 04.07.2022 ல் அழைத்தேன். Horizon Metal Tech நிறுவனம் என்ன ஒப்பந்தம் VME foundry நிறுவனத்துடன் செய்து கொண்டது என்று எனக்கு தெரியாததால் ஒரு ஆய்வு கூட்டம் நடத்தி அந்த கூட்டத்தில் VME foundry நிறுவனம் வழங்கியிருந்த பொருட்கள் மற்றும் எந்திரங்களில் இருந்த குறைகளை சுட்டிக்காட்டி ஒரு minutes of meeting தயாரித்தேன். அதை ஏற்றுக் கொண்டு VME foundry நிறுவனத்திற்காக திரு. முருகையன் அவர்களும் கையொப்பமிட்டார். 04.07.2022 தேதியிட்ட பி.வா.சா.ஆ.7 ஆவணம் பிரதிவாதி வழக்கறிஞரால் கேட்டுக் கொள்ளப்பட்டு சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தைப் பார்த்தார், பார்த்துவிட்டு இந்த பி.வா.சா.ஆ.7 ஆவணம்தான் தன்னால் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவித்தார். பின்னர் நான் VME foundry நிறுவனம் supply செய்திருந்த எந்திரங்களை ஆய்வு செய்தபோது அதில் உள்ள குறைகளை கண்டறிந்து, கண்டறிந்த குறைகள் மட்டுமே தனியாக ஒரு email ஆக அவர்களுக்கு நான் அனுப்பி இருந்தேன்.

VME foundry நிறுவனம் தான் அவர்கள் வழங்கிய எந்திரங்களை erect and commission செய்து தர வேண்டும். பொதுவாக இது போன்ற ஒரு erect and commission பணியினை செய்து முடிப்பதற்கு சுமார் மூன்று மாதங்களில் பணிகள் நிறைவடைந்து விடும். ஆனால் VME foundry நிறுவனத்தில் இருந்து சரியாக ஆட்கள் அனுப்பி பணிகளை முடிக்காத காரணத்தினால்

பிப்ரவரி 2023 ஆம் ஆண்டு வரை கூட பணிகள் நிறைவடையாமலேயே இருந்து வந்தது. VME foundry நிறுவனத்தால் அனுப்பப்பட்ட எந்திரங்கள் மற்றும் பொருட்களை ஆய்வு செய்தபோது நிறைய உதிரி பாகங்கள் அனுப்பப்படாமல் இருந்தது. Project தாமதமான காரணத்தினால் Horizon Metal Tech நிறுவன நிர்வாகிகள் பணிகளுக்கான உதிரி பாகங்களை வெளிச்சந்தையில் இருந்து வாங்கிக் கொடுத்து ஒரு வழியாக பணிகளை நிறைவு செய்தோம். கடைசியாக பிப்ரவரி 2023 இல் Electrical interlocking பிரச்சனை வந்தபோது project பாதியில் நின்றுவிட்டது. இதுகுறித்து Horizon Metal Tech நிறுவனம் VME foundry நிறுவனத்தில் தெரிவித்த போது அவர்கள் அதற்கான உதிரி பாகங்களை அனுப்புவதாக தெரிவித்தார்கள், ஆனால் அவர்கள் கூறியவாறு அனுப்பவில்லை. பிப்ரவரி 23ம் ஆண்டு VME foundry நிறுவனம் கடைசியாக தங்கள் பணியை முடிக்கும் போது ஒரு ஆலோசனைக் கூட்டம் நடந்தது, அந்த கூட்டத்தின் முடிவில் ஒரு minutes of meeting எழுதிக் கொள்ளப்பட்டது, அதில் என்னென்ன பணிகள் நிறைவடையாமல் இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் VME foundry நிறுவனத்திற்காக திரு.அன்புராஜ் என்பவர் கையொப்பமிட்டுள்ளார். பிரதிவாதியின் வழக்கறிஞரால் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 15.02.2023 தேதியிட்ட பி.வா.சா.ஆ.12 minutes of meeting ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தை பார்த்து இந்த ஆவணம் தான் 15.02.2023 தேதியில் கையொப்பமிடப்பட்ட ஆவணம் என்று தெரிவித்தார். VME foundry நிறுவனம் சார்பாக பணி செய்து கொண்டிருந்தவர்கள் அனைவரும் Horizon Metal Tech நிறுவனத்திடம் தெரிவிக்காமல் பணிகளை தொடர்ந்து செய்வார்களா அல்லது செய்ய மாட்டார்களா என்பதைக் கூட தெரிவிக்காமல் திரும்பி வந்து விட்டார்கள்.

அதன் பின்னர் Horizon Metal Tech நிறுவன நிர்வாகிகள் எப்படியாவது எடுத்துக்கொண்ட பணியினை நிறைவு செய்ய வேண்டும் என்று பேசினார்கள். பின்னர் VME foundry எங்களுக்கு வழங்க வேண்டிய எந்திரங்கள் மற்றும் பாகங்களை கணக்கிட்டு அவற்றை வெளிச்சந்தையில் இருந்து பெற்று பின்னர் பணிகளை மேற்கொள்வதற்காக வேறு நிறுவனத்தை பணியில் அமர்த்தி பணியினை நிறைவு செய்தோம். எந்திரங்கள் இயக்க நிலையில் இருக்கிறது, இருப்பினும் எந்திர செயல்பாடு மற்றும் எந்திரத்தில் உள்ள உதிரி பாகங்கள் மற்றும் வெளியில் இருந்து வாங்கி வரப்பட்ட பொருட்கள் ஆகியவற்றின் காரணமாக எந்திரங்களில் பல mismatch கள் உள்ளது. எனவே நிறுவனங்களில் VME foundry கொடுத்த பொருட்களைக் கொண்டு கொடுக்காத பொருளை வெளி சந்தையில் வாங்கி எந்திரத்தின் இயக்க நிலையினை கொண்டுள்ளதால் எந்திரத்தில் உள்ள செயல்பாடு குறை உடையதாக இருந்து வருகிறது. அதை எந்த வகையிலும் சரி செய்ய இயலவில்லை. ஏனெனில் இதில் தொடர்ந்து எந்திரம் செயல்படும் விதத்தில் process constraint இருந்து வருகிறது. Already அவர்கள் எந்திரத்தை நிறுவுவதற்காக கொடுத்த plan layout அடிப்படையில் முழுமையாக எந்திரங்கள் VME foundry நிறுவனத்தால் வழங்கப்பட்டிருந்தால் plan layout உடன் ஒத்துப்போகும். VME foundry நிறுவனம் பாதியில் எந்திரங்களை வழங்க தவறியதாலும், பகுதியாக மட்டுமே எந்திரங்களை வழங்கி இருந்ததாலும், புதிதாக வெளிச்சந்தையில் இருந்து வாங்கி வரப்பட்ட எந்திரங்கள் அடிப்படையில் project நிறைவு செய்ததால் எந்திரங்களில் செயல் குறைபாடு தொடர்ந்து இருந்து வருகிறது.

நான் எந்திரங்களை ஆய்வு மேற்கொண்ட போதும், எந்திரத்தின் பணிகள் நடந்து கொண்டிருக்கும் கொண்டிருந்த விதத்தை பார்க்கும் போதும் என்ன project செய்ய வேண்டும் என்று VME foundry மற்றும் Horizon Metal Tech நிறுவனங்கள் இடையே பேசிக் கொண்டார்கள் என்பதை வைத்துப் பார்க்கும்போது VME foundry நிறுவனம் ஆரம்பம் முதலே பிரதிவாதி நிறுவனத்தை ஏமாற்ற வேண்டும் என்ற முடிவோடு செயல்படுவதாக என்னால் கண்டறிய முடிந்தது. உதாரணமாக சுமார் 10 ton capacity கொண்ட ஒரு எந்திரத்தினை நிறுவுவதற்காக வழங்கப்படும் ஒரு layout என்று ஒப்பந்தத்தில் உள்ள போது வாதி நிறுவனம் வழங்கிய layout ல் சுமார் 3 ton capacity உள்ள ஒரு எந்திரத்தை நிறுவுவதற்கான அளவிலேயே layout வழங்கப்பட்டுள்ளது. இது போன்று பல குறைகள் மற்றும் என்னென்ன குறைகள் இருந்தது என்பதை முழுமையாக minutes of meeting (Ex.B7 and Ex.B12) ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதியின் வழக்கறிஞரால் பி.வா.சா.ஆ.10 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்க அனுமதி கேட்கப்பட்டு சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அதை சாட்சி பார்த்து இந்த ஆவணம் 13.12.2022 தேதியில் அன்புராஜ், கௌதம் உள்ளிட்ட VME foundry நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட minutes of meeting என்று சாட்சி கூறினார். சாட்சியிடம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் பி.வா.சா.ஆ.4 ஆவணம் காண்பிக்கக் கேட்கப்பட்டது, சாட்சியிடம் அந்த ஆவணத்தை காட்டிய போது சாட்சி அந்த ஆவணத்தை சரிபார்த்தார், பார்த்துவிட்டு இந்த ஆவணம் தன்னால் தயாரிக்கப்பட்டது என்று தெரிவித்தார். இந்த ஆவணத்தில் competency of the goods supplied and the list of lacunae, details of non supply of goods, details of variation in supply of goods is also recorded. Horizon

Metal Tech நிறுவன பணிகள் அனைத்தும் நிறைவு செய்து ஜூன் 2023 இல் பணிகள் துவங்கப்பட்டதாக எனக்கு ஞாபகம். இந்த plant ன் சராசரி தயாரிப்பு அளவானது ஒரு மாதத்திற்கு சுமார் 200 முதல் 250 டன் ஆகும். சுமார் ஒரு மாதத்திற்கு எந்திரங்களால் தயாரிக்கப்படும் பொருட்களின் சந்தை மதிப்பானது சுமார் இரண்டு முதல் மூன்று கோடி வரை இருக்கும். VME என்பது Vel Murugan Engineering Works என்பதுதான் ஆரம்பத்தில் இருந்த வாதி நிறுவனத்தின் பெயர். பின்னர் அதை VME Foundry Equipments Private Limited என்று மாற்றினார்கள். VME என்று Minutes of meeting ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது எனக்குத் தெரிந்தவரை பணிகளை மேற்கொண்டது VME foundry நிறுவனம்தான், அதன் பின்னர் அந்த நிறுவனத்திற்கு வேறு பெயர்கள் ஏதும் மாற்றப்பட்டதா என்பது எனக்குத் தெரியாது.

முதல் விசாரணை நிறைவுற்றது.

வாதி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் விசாரணை நிறைவுற்றது.

Sd/–K.Hariharan
Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.